07.09.2016

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### அதிகரித்து வரும் இயற்கை ரப்பர் பயன்பாடு



நாட்டின் இயற்கை ரப்பர் உற்பத்தி சென்ற ஜூலை மாதத்தில் 11 சதவீதம் அதிகரித்து 52,000 டன்னாக இருந்தது. அதன் பயன்பாடு 4.3 சதவீதம் உயர்ந்து 87,000 டன்னாக காணப்பட்டது.

*ரப்பர் இறக்குமதி சென்ற ஜூலை மாதத்தில் 41,917 டன்னிலிருந்து சரிவடைந்து 41,157 டன்னாகவும்; ஏற்றுமதி 39 டன்னிலிருந்து குறைந்து 34 டன்னாகவும் இருந்தது.

*நடப்பு நிதி ஆண்டின் ஏப்ரல்-ஜூலை வரையிலான கால அளவில் இயற்கை ரப்பர் உற்பத்தி 4.5 சதவீதம் உயர்ந்து 1.87 லட்சம் டன்னாக இருந்தது. ரப்பர் பயன்பாடு

3,26,935 டன்னிலிருந்து 5.4 சதவீதம் அதிகரித்து 3,44,525 டன்னாக காணப்பட்டது.

*ஏப்ரல்-ஜூலை வரையிலான கால அளவில், இயற்கை ரப்பர் இறக்குமதி 1,54,761 டன்னிலிருந்து குறைந்து 1,48,488 டன்னாகவும்; ஏற்றுமதி 53 டன்னிலிருந்து அதிகரித்து 267 டன்னாகவும் இருந்தது.

*ஜூலை இறுதி நிலவரப்படி இயற்கை ரப்பர் கையிருப்பு 2.11 லட்சம் டன்னாக உள்ளது என ரப்பர் வாரியம் தெரிவித்துள்ளது.

## விவசாய கடன் தள்ளுபடியான பயனாளிகள் பட்டியல் இணையதளத்தில் வெளியீடு

சென்னை: விவசாயக் கடன்கள் தள்ளுபடி செய்யப்படவுள்ள பயனாளிகளின் விவரங்கள் கூட்டுறவுத் துறையின் இணையதளத்தில் (www.tncu.tn.gov.in) வெளியிடப்பட்டுள்ளது. இதுதொடர்பாக, ஆட்சேபணைகளைத் தெரிவிக்கலாம் என தமிழக அரசு தெரிவித்துள்ளது. ஆறாவது முறையாக முதல்வராக ஜெயலலிதா பதவியேற்றதும், சிறு-குறு விவசாயிகளின் கடன்களை தள்ளுபடி செய்வதற்கான கோப்பில் கையெழுத்திட்டார். இதைத் தொடர்ந்து, கூட்டுறவு-உணவுத் துறை சார்பில் அரசு உத்தரவும், வழிகாட்டி நெறிமுறைகளும் வெளியிடப்பட்டன. இணையதளத்தில் தகவல்: கடன் தள்ளுபடி பெறுவதற்கு 16 லட்சம் பேர் தகுதி படைத்தவர்கள் என ஏற்கெனவே தெரிவிக்கப்பட்டது. இவர்களின் விவரங்கள் இணையதளத்தில் வெளியிடப்பட்டது. அதில், மாவட்டத்தின் பெயர், கடன் பெற்ற தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கத்தின் பெயர்கள் இடம்பெற்றுள்ளன. அதை உள்ளீடு செய்தால், கடன் தள்ளுபடி பெறும் பயனாளிகளின் பட்டியலில் பெயர் இடம்பெற்றுள்ளதா என்பதை அறியலாம். பட்டியலில், வரிசை எண், கடனின் வகை, கடன் பெற்றவரின் பெயர், சங்க உறுப்பினரின் எண், கடனின் எண், எந்த நோக்கத்துக்காக கடன் வாங்கப்பட்டது, நிலத்தின் அளவு கடன் ஒப்புதல் அளிக்கப்பட்ட தேதி ஆகிய விவரங்கள் இடம்பெற்றுள்ளன. மேல்முறையீட்டுக்கு வாய்ப்பு: 5 ஏக்கர் வரை நிலம் வைத்துள்ளோருக்கு கடன் தள்ளுபடி அளிக்கப்படுகிறது. ஏதேனும் விவசாயிகளின் பெயர்கள் விடுபட்டிருந்தாலோ அல்லது கூடுதல் நிலங்கள் வைத்திருக்கும் விவசாயிகள் சட்ட

விரோதமாக பயன் பெற்றாலோ அது குறித்து அதிகாரிகளிடம் முறையீடு செய்யலாம் என்று தமிழக அரசு தெரிவித்துள்ளது.

இதுகுறித்து, கூட்டுறவுத் துறை அதிகாரிகள் கூறியது:- கடன்கள் தொடர்பாக, வட்ட அளவில் முறையீடு செய்யும் காலம் முடிவடைந்துள்ளது. இதில் கோரிக்கைகள் ஏதும் ஏற்கப்படாவிட்டால், மாவட்ட பதிவாளர் அளவில் அடுத்த 2 வாரங்களுக்குள் முறையீடு செய்யலாம். அதிலும் கோரிக்கைகள் தள்ளுபடி செய்யப்பட்டால் இணைப் பதிவாளரிடம் மறு மேல்முறையீடு செய்யலாம். அக்டோபர் முதல் வாரத்துக்குள் அனைத்தும் மேல்முறையீடுகளும் செய்யப்பட்டு அவை தீர்க்கப்படும்.

கடன் வழங்கப்பட்ட தேதியில் 5 ஏக்கருக்குள் நிலம் இருந்திருப்பது அவசியம். அப்படி இருந்தால் மட்டுமே கடன் தள்ளுபடி செய்யப்படும். மார்ச் 31-ஆம் தேதிக்குள் கடன் பெற்றோருக்கு மட்டுமே தள்ளுபடி திட்டம் பொருந்தும். அதற்குப் பிறகு யாரேனும் கடன் தொகையை திருப்பிச் செலுத்தியிருந்தால் அந்தப் பணம் உரிய முறையில் விவசாயிக்கு கூட்டுறவுத் துறை அளிக்கும் என்றனர்.

புதிதாக வழங்கப்படும்: கடன் தள்ளுபடி பெற்றவர்களுக்கு புதிதாக கடன் வழங்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளன.

**கேள்விக்குறியாகும் பாசன நிலங்கள்**



1956-இல் பாசனத்துக்காகத் திறக்கப்பட்ட பவானிசாகர் அணைக்கு முக்கிய நீர் ஆதாரமாக இருப்பது பவானி ஆறு. இந்த அணையில் இருந்து கீழ்பவானி, தடப்பள்ளி- அரக்கன்கோட்டை, காலிங்கராயன் ஆகிய மூன்று பிரதான பாசனப் பகுதிகள் பாசன வசதி பெறுகின்றன.

தடப்பள்ளி- அரக்கன்கோட்டை பாசனம் மூலம் 24,504 ஏக்கர், காலிங்கராயனில் 15,743 ஏக்கர் விளைநிலங்கள் ஈரோடு மாவட்டத்தில் பாசன வசதி பெறுகின்றன. ஆனால், கீழ்பவானி பாசனத்தில் ஈரோடு,திருப்பூர், கரூர் மாவட்டத்தின் அரவக்குறிச்சி வரை 2.07 லட்சம் ஏக்கர் விளைநிலங்கள் பாசன வசதி பெறுகின்றன.

பாசனத்துக்குத் திறக்கப்பட்டு 61-ஆவது ஆண்டில் அடியெடுத்து வைத்துள்ள பவானிசாகர் அணையின் மொத்தக் கொள்ளளவு 32.8 டி.எம்.சி. அணையின்

வரலாற்றில் இதுவரை 6 முறை மட்டும் இந்தஅணை நிரம்பியுள்ளது. கடந்த 7 ஆண்டுகளாக இந்த அணை நிரம்பவில்லை. இந்த அணைக்கு வரும் நீர்வரத்து ஒவ்வோர் ஆண்டும் படிப்படியாகக் குறைந்து வரும் நிலையில் காவிரி நடுவர் மன்றஇறுதித் தீர்ப்பால் அணைக்கு வர வேண்டிய நீரின் அளவு மேலும் பாதிக்கப்பட்டுள்ளது.இறுதித் தீர்ப்புக்கு முன்புவரை கீழ்பவானி பாசனத்துக்குப் பெறப்பட்ட 36 டி.எம்.சி. தண்ணீர், தீர்ப்புக்குப் பின்னர் 28 டி.எம்.சி.யாக குறைக்கப்பட்டுவிட்டது. இதேபோல, 16 டி.எம்.சி. தண்ணீரைப் பயன்படுத்தி வந்த பழைய தடப்பள்ளி- அரக்கன்கோட்டை, காலிங்கராயன் பாசனப் பகுதிகளுக்கு 8.13 டி.எம்.சியாக குறைக்கப்பட்டுவிட்டது.

இதனால், ஈரோடு மாவட்டத்தில் பழைய பாசனம், புதிய பாசனம் பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள், கர்நாடக- தமிழக விவசாயிகளைப் போல சண்டையிட்டுக்கொள்ளும் நிலை உருவாகியுள்ளது. இந்த நிலையில், சிறுவாணியில் அணை கட்டும் கேரள அரசின் முடிவால் உச்சகட்டப் பாதிப்பில் சிக்கிக் கொள்வது ஈரோடு விவசாயிகள்தான். சிறுவாணி அணை கட்டப்பட்டால் பவானிசாகர் அணை நிரம்புவதற்கான வாய்ப்பே இல்லாமல் போய்விடும். இந்த அணையை நம்பியிருக்கும் பவானி பாசன விளைநிலங்கள் பாலைவனமாகிவிடும்.

கீழ்பவானி பாசனத்தை நம்பி இருக்கும் 30 கசிவுநீர்த் திட்டங்கள் முடக்கப்பட்டு, அவற்றை நம்பி இருக்கும் ஆயிரக்கணக்கான விளைநிலங்களும் பாதிக்கப்படும். கீழ்பவானி அணையின் கசிவுநீரில் நீராதாரத்தைப் பெறும் பெரும்பள்ளம் ஓடை, பிச்சைக்காரன்பள்ளம் ஓடை ஆகியவையும் பாதிக்கப்படும். இதன்மூலம், ஈரோடு மாநகராட்சியில் நிலத்தடி நீர்மட்டம் குறைந்து 1.50 லட்சம் மக்களின் குடிநீர் ஆதாரம் பாதிக்கப்படும். மத்தியில் இதுவரை ஆண்ட அரசுகளும், இப்போது ஆளும் அரசும், கர்நாடகம்,

கேரளத்தில் தங்களது கட்சிகளுக்கான வாக்கு வங்கியைப் பாதுகாப்பதையே இலக்காகக் கொண்டு செயல்படாமல், காவிரி, பவானி நதிகளில் தமிழகத்துக்கான உரிமையை உறுதிப்படுத்த வேண்டிய நேரம் இது. நீதி, நேர்மை, சமதர்மத்துக்கு குரல் கொடுப்பதாகக் கூறும் இடதுசாரி இயக்கங்கள் கேரளத்திலும், தமிழகத்திலும் எதிரெதிர் நிலைப்பாடு எடுக்காமல் தமிழகத்தின் பக்கம் இருக்கும் நியாயத்துக்கு ஆதரவாகக் குரல் கொடுக்க வேண்டும்.இந்தச் சிக்கலான நிலையில் அதிமுக, திமுக ஆகிய பிரதான கட்சிகள் மாநிலத்தில் உள்ள பிற அரசியல் கட்சிகளையும் இணைத்து ஒரே குரலில் சட்ட ரீதியாகவும், ஜனநாயக ரீதியாகவும் அழுத்தம்

கொடுத்தால் மட்டுமே மத்திய அரசை நியாயத்தின் பக்கம் கொண்டு வர முடியும் என்கின்றனர் ஈரோடு மாவட்ட விவசாயிகள்.

## கரும்பில் புழு தாக்குதல் கட்டுப்படுத்தும் வழிமுறைகள்



கரும்பு பயிரில் காணப்படும் புழுத்தாக்குதலை கட்டுப்படுத்துவதற்கான வழிமுறைகளை பார்ப்போம்.

கரும்பு பயிரில் இடைக்கணு, நுனிக்குருத்து மற்றும் வேர்ப்புழு தாக்குதல் பரவலாக காணப்படுகிறது.

**இடைக்கணுப்புழு:** கரும்பின் கணுயிடைப் பகுதியில் துளைகள் காணப்படும், துளைப்பக்கத்தில் புழுவின் கழிவு வெளித்தள்ளியிருக்கும். தாக்குதலுக்கு உள்ளான கணு சிறுத்து இருக்கும். காற்று வீசினால் உடைந்து போகும். கரும்பு நடவு செய்த 4 முதல் 6 மாதம் வரையிலும், ஜூன் முதல் டிசம்பர் மாதம் வரையில் இப்புழு தாக்குதல் அதிக அளவில் காணப்படும்.

**கட்டுப்படுத்தும் முறைகள்:** டிரைக்கோகிரம்மா கைலோனீஸ் என்ற முட்டை ஒட்டுண்ணியை ஏக்கருக்கு 2cc என்ற வீதம் நடவு செய்த 4 -வது மாதம் முதல் 6-வது மாதம் வரை 15 நாள் இடைவெளியில் 6 முறை கட்ட வேண்டும்.

டெடராஸ்டிக்கஸ் என்ற கூட்டுப்புழு ஒட்டுண்ணியை நடவு செய்த 5, 6 மற்றும் 7-வது மாதங்களில் ஏக்கருக்கு 1,500 குளவி எண்ணிக்கையில் விட வேண்டும். நடவு

செய்யப்பட்ட 5 மற்றும் 7-வது மாதங்களில் இரண்டு முறை தோகை உரிப்பதனால் இப்புழுவை வெகுவாக கட்டுப்படுத்த முடியும்.

**நுனிக்குருத்து புழு:** இளம் பழுப்பு நிற புழுக்கள் இலையின் தடுநரம்பை துளைத்து சென்று பின்னர் தண்டின் வளரும் பகுதியை தாக்கும். இதனால் நுனிக்குருத்து காய்ந்து பக்கத்து தோகையில் சிறு சிறு துளைகள் காணப்படும். ஜூன் முதல் டிசம்பர் மாதம் வரையில் பாதிப்பு இருக்கும்.

**கட்டுப்படுத்தும் முறைகள்:** கரும்பு நட்ட 5 மற்றும் 7-வது மாதங்களில் இரண்டு முறை தோகை உரிப்பதனால் கட்டுப்படுத்த முடியம். தண்ணீர் தேங்கும் நிலங்களில் வடிகால் வசதி செய்ய வேண்டும்.

**வேர்ப்புழு:** வேர்ப்புழு கரும்பின் ஆதார வேர்களையும், மண்ணில் புதைந்துள்ள கணுக்களையும் தாக்கி உண்ணும். கீழ் தோகைகள் மஞ்சளாகி பின்னர் தூர் முழுவதும் காய்ந்து விடும்.

**கட்டுப்படுத்தும் முறைகள்:** கோடை உழவை ஆழமாக உழுது கூட்டுப்புழுக்களை வெளிக்கொண்டுவந்து பறவைகளுக்கு உணவாக்கலாம். உயிரியல் முறையாக பிவேரியா பேசியானா அல்லது மெட்டாரைசியம் அனிசோப்பிலியே எனும் பூஞ்சாணத்தை ஏக்கருக்கு 2 கிலோ வீதம் தொழு உரத்துடன் கலந்து நடவு செய்ய வேண்டும்.

**உலக தென்னை தினம்**



களவாய்ப்பட்டி ஊராட்சி நடுநிலைப் பள்ளியில் உலக தென்னை தினம் அண்மையில் கொண்டாடப்பட்டது.

பெத்தநாயக்கன்பாளையம் ஒன்றியத்துக்குள்பட்ட களவாய்ப்பட்டி ஊராட்சி நடுநிலைப் பள்ளியில் உலக தென்னை மரங்கள் தினம் கொண்டாடப்பட்டது. இதுகுறித்து ஆசிரியர் பெ.ராஜாங்கம் மாணவர்களிடம் கூறுகையில், ஆசிய பசிபிக் நாடுகளின் தென்னை கூட்டமைப்பு உருவான நாள் செப்டம்பர் 2. அதன் நினைவாக உலக தென்னை தினம் கொண்டாடப்படுகிறது. தென்னை மரத்தில் இருந்து கிடைக்கும் ஒவ்வொரு பொருளும் மக்களுக்கு பயன் தருகிறது என்றார்.

## தேசிய தோட்டக்கலை பயிர்களுக்கு மானியத்துடன் ரூ.17 கோடி ஒதுக்கீடு



கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தேசிய தோட்டக்கலை இயக்கம் மூலம் பல்வேறு கிட்டங்களைச் செயல்படுத்த மானியத்துடன் ரூ. 17 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதுகுறித்து தோட்டக்கலை துறை சார்பில் திங்கள்கிழமை வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பு:

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தோட்டக்கலை பயிர்களில் வீரிய ஒட்டுரக காய்கறிகள், மா, கொய்யா, திசுவாழை, மல்லிகை, இஞ்சி, பூண்டு, மஞ்சள் மற்றும் கிராம்பு ஆகியவற்றில் புதிய தோட்டங்கள் அமைக்க ரூ.7,99,82,000 செலவில் 415 ஹெக்டேர் பரப்பில் 40 சத மானியமும், பப்பாளி, ஆரஞ்சு மற்றும் எலுமிச்சை போன்ற பயிர்களுக்கு 50 சத மானியமும் வழங்கப்படுகிறது.

மேலும், உயர் தொழில்நுட்ப சாகுபடி முறைகளை உள்ளடங்கிய பாதுகாக்கப்பட்ட சாகுபடி இனத்திற்கு ரூ. 10, 98,62,000 செலவில் 2.35 லட்சம்

சதுர மீட்டர் பரப்பில் பசுமைக்குடில்கள் மற்றும் நிழல்வலை குடிகள் அமைக்கவும், 50 ஹெக்டேர் பரப்பளவில் நிலப்போர்வை அமைக்க 50 சத மானியத்தில் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

பண்ணை இயந்திரங்களான மினி டிராக்டர்கள், பவர் டில்லர்கள் மற்றும் தெளிப்பான்கள் 25 முதல் 50 சத மானியம் வரை அனுமதிக்கப்பட்டு கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ரூ. 5 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அறுவடைக்கு பிந்தைய மேலாண்மைக்கான உள்கட்டமைப்பு வசதிகள் மேற்கொள்ள 50 சத மானியக்கில் சிப்பம் கட்டும் அறை, குறைந்த செலவின வெங்காய சேமிப்பு கிடங்கு போன்றவை செயல்படுத்தப்பட உள்ளன. தோட்டக்கலை பயிர்களுக்கான சந்தை உள்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்த மானியக்குடன் கூடிய ஊரக சந்தை, சில்லறை விற்பனை நிலையம் மற்றும் நடமாடும் விற்பனை நிலையம் அமைக்க விவசாயிகள் மற்றும் விவசாய உற்பத்தி குழுக்கள் வரவேற்கப்படுகின்றன. இதற்காக ரூ. 22 .75 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பண்ணை சாகுபடிக்கு தேவையான பொருள்கள் 50 சத மானியத்தில் விவசாயிகளுக்கு ரூ. 2 ஆயிரத்திற்கும் மிகாமல் ரூ. 32.32 லட்சம் நிதி ஒதுக்கீட்டில் 1,600 விவசாயிகளுக்கு வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

உயர் தொழில்நுட்ப சாகுபடி முறைகளில் விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்க ரூ.8.20 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் 40 சத மானியத்தில் தேனீ வளர்ப்பு, 50 சத மானியத்தில் பழைய தோட்டங்கள் புனரமைத்தல், மண்புழு உரம் உற்பத்தி மற்றும் மண்புழு உர படுக்கை அமைப்பதற்கு ரூ. 3.30 லட்சமும், தோட்டக்கலை பயிர்களுக்காக 30 சத மானியத்தில் ஹெக்டேருக்கு ரூ. 500-க்கும் மிகாமல் நுண்ணூட்ட கலவை விநியோகம் செய்ய ரூ.1.50 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர் துறை மூலம் தேசிய தோட்டக்கலை இயக்கம் விவசாயிகள் பயன் பெறும் வகையில் மானியக்குடன் கூடிய பல்வேறு கிட்டங்களுக்காக ரூ.17 கோடி மதிப்பில் செயல்படுக்கப்பட உள்ள நிலையில் இந்த வாய்ப்பை விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என அதில் தெரிவிக்கபபட்டுள்ளது.

## கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மானியத்துடன் தீவனப் பயிர் சாகுபடி திட்டங்கள்



கிருஷ்ணகிரி மாவட்டத்தில் அரசு மானியத்துடன் தீவனப் பயிர் சாகுபடி திட்டங்கள் செயல்படுத்தப்படவுள்ளதாக மாவட்ட ஆட்சியர் சி.கதிரவன் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

கால்நடைகளுக்கான தீவன பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் வகையில் கால்நடை வளர்ப்போர் பசுந்தீவனத்தை உற்பத்தி செய்வதை ஊக்கப்படுத்த அரசு கடந்த 5 ஆண்டுகளாக மாநில தீவன அபிவிருத்தித் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது.

நடப்பு நிதியாண்டில் அரசு மானியத்துடன் கூடிய தீவனப்பயிர் சாகுபடி திட்டங்களைச் செயல்படுத்தவுள்ளது. அதன்படி, கம்பு, நேப்பியா தீவனப்பயிர் 0.25 ஏக்கர் பரப்பில் சாகுபடி செய்ய தீவனப்புல் கரணைகள் வழங்கும் திட்டம். மானாவரியில் 0.25 ஏக்கர் பரப்பில் தீவனச் சோளம் மற்றும் தீவனத் தட்டைப்பயறு சாகுடி செய்ய தீவன விதைகள் வழங்குதல், முற்போக்கு விவசாயிகள் மூலம் சான்றிதம் பெற்ற தீவனச்சோளம் மற்றும் தீவன தட்டைப்பயிறு விதைகளை உற்பத்தி செய்வதற்கு தீவன விதைகள் இலவசமாக வழங்கப்படும்.

கால்நடைகள் வளர்ப்போரிடையே நவீன தீவன உற்பத்தி முறைகள் குறித்து ஒருநாள் பயிற்சி, ஒசூர் மாவட்ட கால்நடைப் பண்ணையில் வழங்கப்படும். தீவனப் பயிர் அதிக அளவில் கிடைக்கும் காலங்களில் அவற்றை சேகரித்து கால்நடைகளுக்கு தீவனப் பற்றாகுறைக் காலங்களில் வழங்குவதற்கேற்ப ஒரு பயனாளிக்கு ஊறுகாய் புல் தயாரிக்கும் பொருட்டு 250 கிலோ கொள்ளளவு உடைய 4 சைலேஜ் பைகள் இலவசமாக வழங்கப்படும். மின்சாரத்தால் இயங்கும் புல் நறுக்கும் கருவிகள் நிறுவுவதற்கு விவசாயிகளுக்கு 60 சத மானியம் வழங்குதல். அசோலாத் திட்டல் அமைக்க ஒவ்வொரு பயனாளிக்கும் அதிகபட்சம் 2 அசோலா அலகுகள் வழங்குதல். மர வகை தீவனத்தின் முக்கியத்துவத்தை உணர்த்த கல்யாண முருங்கை, அகத்தி, சூபாபுல் போன்ற மரக்கன்றுகள் விவசாயிகளுக்கு வழங்குதல். மரவகை தீவனப்பயிர் உற்பத்தியைப் பெருக்குதல் மூலம் கோடை மற்றும் தீவனப்பற்றாக்குறை காலங்களில் தீவனம் கிடைக்க செய்தல். விலையில்லா ஆடுகள் வழங்கப்பட்ட பயனாளிகளுக்கு 10 அகத்தி மரக்கன்றுகள் இலவசமாக வழங்குதல் ஆகிய திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

இந்தத் திட்டங்களில் பயனடைய விரும்பும் விவசாயிகள் அருகில் உள்ள கால்நடை மருந்தக கால்நடை உதவி மருத்துவரை அணுகி விண்ணப்பங்களை அளித்து பயன்பெற கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## விவசாய நிலத்தின் தரத்தினை தெரிவிக்கும் மண்வள அட்டைகள்: வேளாண் துறை வழங்கல்

**விழுப்புரம்:** விழுப்புரம் மாவட்டத்தில் தேசிய மண்வள இயக்கத்தில், விவசாயிகளுக்கு “மண்வள அட்டைகள்” வழங்கிடும் பணியை ஆட்சியர் எம்.லட்சுமி அண்மையில் தொடங்கி வைத்தார். ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் வேளாண் இணை இயக்குநர் ராமலிங்கம் விளக்கிப் பேசியது: தேசிய மண்வள அட்டை இயக்கமானது, பிரதமரால் 2015-ஆம் ஆண்டு பிப்ரவரி 17-இல் ராஜஸ்தானில் துவக்கி வைத்து நாடு முழுவதிலும் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இந்தியாவில் பெருகிவரும் மக்கள் தொகையில், குறைந்து வரும் சாகுபடி பரப்பு மற்றும் அதிகரிக்கும் பருவநிலை மாற்றங்கள் என நகரும் இக்கட்டான இக்காலகட்டத்தில் விவசாயத்திற்கு அடிப்படையான மண்ணின் தன்மை, சத்துகளின் நிலை ஆகியவற்றை ஆராய்ந்து அதன் அடிப்படையில் பயிர்களுக்குத் தேவையான சத்துக்களை சரியாகவும், சரிவிகிதமாகவும் அளிப்பதன் மூலம் மண்வளம் காப்பதோடு, உரச்செலவினைக் குறைக்கு விவசாயிகள் குறைந்த செலவில் நிறைந்த மகசூல் எடுத்திட வேண்டும் என்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

விழுப்புரம் மாவட்டத்தில் "கிரிட் முறையில்" வேளாண்துறை மூலம் கடந்தாண்டு மற்றும் நடப்பாண்டில் 85,409 மண் மாதிரிகள் எடுக்கப்பட்டு, மாவட்டத்திலுள்ள மண் ஆய்வுக்கூடங்கள் மூலம், இதுவரை 44,401 மண் மாதிரிகள் ஆய்வுசெய்யப்பட்டு முடிவுகள் வலைதளத்தில் ஏற்றப்பட்டுள்ளது. மாவட்டத்தில் 5,19,000 விவசாயிகளுக்கு மண்வள அட்டைகள் வழங்க திட்டமிட்டுள்ளதால், வரும் டிசம்பருக்குள் இப்பணிகள் முடிக்கப்படும். இந்த மண்வள அட்டையில், விசாயிகளின் மண்ணின் நயம், கார அமிலத்தன்மை, தழை, மணி, சாம்பல் சத்துக்கள் மற்றும்நுண்சத்துக்களின் அளவுகள் தெளிவாக வழங்கப்படுகிறது.

விவசாயிகள் தங்கள் மண்ணிற்கு இடவேண்டிய உரங்களின் விவரங்கள் சாகுபடி செய்திட வேண்டிய பயிர்களின் விவரங்கள் அதில் அளிக்கப்படுகிறது. இதனால் விவசாயிகள், தங்கள் நிலத்திலுள்ள சத்துக்களின் அடிப்படையில் உர மேலாண்மை செய்வதால், ரசாயன உரங்களின் பயன்பாடு குறைவதுடன் மகசூல் அதிகரித்து வருவாயும் அதிகரிக்கும். மாவட்டக்திலுள்ள விவசாயிகள், தேசிய மண்வள அட்டை இயக்கத்தில் பயன்பெற வேண்டும் என்றார்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## கத்தரிக்காய் புவியியல் குறியீடு

நாயக்கன்பட்டி கத்தரிக்காய், பார்த்திபனுார் கத்தரிக்காய் என தமிழகம் பெருமை பேசுகிறது. ஆனால் கர்நாடகா 'உடுப்பி மட்டி குல்லா' என்ற பெயரில் கத்தரிக்காய்க்கு புவியியல் குறியீடை வாங்கி விட்டது. உடுப்பிக்கு அருகில் உள்ள ஒரு கிராமத்தின் பெயரே மட்டி.

இதனை மட்டு என்றும் கூறுவர். பச்சை நிறத்தில் மட்டுமே இருக்கும் இந்தக் கத்தரிக்காய் உருண்டையாக, கோள வடிவில் இருக்கும். அதனால் தான் 'குல்லா' எனப் பெயர் பெற்றது. 400 ஆண்டுகளாக உடுப்பி சுற்று வட்டாரத்தில் பயிரிடப்படும் இந்தக் கத்தரிக்காய் உடுப்பி உணவுகளில் முதலிடம் பெறுகிறது. பி.டி., கத்தரிக்காயின் வரவு 'உடுப்பி மட்டி குல்லா' கத்தரிக்காய்க்கு சவாலாக உள்ளது.

## வெள்ளரி பயிரிடுவதில் விவசாயிகள் ஆர்வம்

ஆர்.கே.பேட்டை: கோடையில் கிடைக்கும் நுங்கு, தர்பூசணி போன்றவற்றில் முதலிடம் பிடிப்பது வெள்ளரிப் பிஞ்சு தான். பயணத்தின் போதும், சந்தையிலும் வாங்கி ருசிக்கும் வெள்ளரி, ஆர்.கே.பேட்டை சுற்றுப்பகுதியில் தற்போது பயிரிடப்பட்டு வருகிறது.

மென்மைக்கும், சுவைக்கும் புகழ்பெற்ற வெள்ளரிப் பிஞ்சு, தாகம் தணித்து, உடல் சூட்டை குறைக்கக் கூடியது. கோடையில் கிடைக்கும் வெள்ளரிப் பிஞ்சு, ஒரு வரப்பிரசாதம். முற்றிய காய்களை விட
பிஞ்சுகளுக்கு மவுசு அதிகம். பேருந்து மற்றும் ரயில் பயணங்களில் கிடைப்பதாலும், தாகம் தணிக்கும் இயற்கை விளைபொருள் என்பதாலும் அதற்கு என்றுமே வரவேற்பு அதிகம்.

சந்தை வாய்ப்பும் அதிகமுள்ளதால், வெள்ளரி பயிரிடுவதில் விவசாயிகள் ஆர்வம் காட்டுகின்றனர். ஆர்.கே.பேட்டை அடுத்த, எஸ்.கே.வி.கண்டிகை

பகுதியில், தோட்டப் பயிரான கத்தரி, வெண்டை பயிரிடப்பட்டுள்ள வயல்வெளி ஓரங்களில், வெள்ளரி பயிரிடுகின்றனர். இது, உபரி வருமானமாக அமைகிறது. 90 நாள் பயிரான வெள்ளரியில், 45வது நாளிலிருந்து அறுவடையை மேற்கொள்ளலாம்.

பிஞ்சுகளின் வயதை வைத்து, மூன்று ரகமாக தரம் பிரிக்கப்படுகிறது. தோட்டங்களில், 20 ரூபாய்க்கு கொள்முதல் செய்யப்படும் ஒரு கிலோ வெள்ளரி, சந்தையில், 40 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது.

## ஒரே வாழைத்தாரில் அதிசயம்: சிகப்பு, பச்சை நிறத்தில் காய்

கோபி: கோபி அருகே விவசாயி தோட்டத்தில் செவ்வாழைத்தாரில், பாதி பச்சையாகவும், மீதி சிகப்பாகவும் காய்கள் இருந்தது.

கோபி நல்லகவுண்டம்பாளையம் அருகே பூஞ்சோலை நகரை சேர்ந்தவர் தட்சிணாமூர்த்தி, 47. விவசாயி; இவர் இரண்டரை ஏக்கர் நிலத்தில், செவ்வாழை ரகத்தில் 2,000 வாழைக்கன்றுகள் சாகுபடி செய்துள்ளார். இதில் ஒரு மரத்தில், செவ்வாழைத்தார் ஒன்று ஏழு சீப்புகள் பச்சை நிறமாகவும், மீதி ஐந்து சீப்புகள் சிகப்பு நிறத்தில் காய்த்திருந்தது. இதைப் பார்த்து வியப்படைந்தார். இந்த தகவல் அறிந்த அப்பகுதியை சேர்ந்த மக்கள், அதிசய வாழைத்தாரை ஆச்சர்யத்துடன் பார்த்துச் சென்றனர்.

## மகிளிப்பட்டி பகுதியில் கோமாரி தடுப்பூசி முகாம்

கிருஷ்ணராயபுரம்: மகிளிப்பட்டி கிராமத்தில், மாடுகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி முகாம் நடந்தது. கரூர் கால்நடைத்துறை மண்டல இணை இயக்குனர் பழனிவேல் உத்தரவின்படி, கிருஷணராயபுரம் அடுத்த மகிளிப்பட்டியில், கோமாரி நோய் தடுப்பூசி முகாம் நடந்தது. இதில், குளித்தலை கோட்ட உதவி இயக்குனர் முருகன், மகாதானபுரம் கால்நடை டாக்டர் அருண்ராம்குமார் ஆகியோர் கொண்ட குழுவினர், 250க்கும் மேற்பட்ட கால்நடைகளுக்கு கோமாரி தடுப்பூசி போட்டனர். இதில், சிந்தலவாடி பஞ்சாயத்து தலைவர் செந்தில்குமார், துணை தலைவர் பிச்சை ஆகியோர் கலந்து கொண்டனர்.

## ஓணச்சந்தையில் விற்பனை துவக்கம்

மூணாறு: கேரளாவில் ஓணம் பண்டிகை செப். 14ல் கொண்டாடப்படுகிறது.இதனை பாமர மக்களும் கொண்டாடும் வகையில் அரசு பல்வேறு சலுகைகளை வழங்குவது வழக்கம். அதன்படி காய்கறி உட்பட அத்தியாவசிய பொருட்கள் மலிவு விலையில் வழங்கப்படும்.
மாவேலி ஸ்டோர் மற்றும் சப்ளை கோ ஆகிய அரசு நிறுவனங்கள் மூலம் ஆண்டு முழுவதும் மலிவு விலையில் பொருட்கள் வழங்கி வரும் நிலையில், வேளாண்துறை, கூட்டுறவு வங்கிகள் உட்பட பல்வேறு அமைப்பினரும் ஓணப் பண்டிகையின்போது மட்டும் மலிவு விலையில் பொருட்களை வழங்குவர்.
தொடக்கம் மூணார் சர்வீஸ் கூட்டுறவு வங்கி மூலம் மாட்டுப்பட்டி ரோட்டில் நேற்று 'ஓணச் சந்தை' தொடங்கப்பட்டது. இந்த சந்தை வரும் 13ம் தேதி வரை செயல்பட உள்ளது. இங்கு முதல் விற்பனையை வங்கி தலைவர் சசி தொடங்கி வைத்தார்.செயலாளர் பேபிபால், மூணாறு பகுதி மார்க்சிஸ்ட் செயலாளர் விஜயன் மற்றும் வங்கி ஊழியர்கள் உட்பட பலர் பங்கேற்றனர். இங்கு இயற்கை உரத்தில் விளைவிக்கப்பட்ட காய்கறிகள் மற்றும் அத்தியாவசிய பொருட்கள் அனைத்தும் மலிவு விலையில் கிடைப்பதால், மக்கள் ஆர்வமுடன் வாங்கிச் சென்றனர்.

## விவசாயிகளுக்கு 3 நாள் பயிற்சி துவக்கம்

உத்தமசோழபுரம்: சேலம், உத்தமசோழபுரத்தில் உள்ள, தமிழ்நாடு மாநில வேளாண்மை வாரிய பயிற்சி மையத்தில், விவசாயிகளுக்கான, மூன்று நாட்கள் பயிற்சி முகாம் நேற்று துவங்கியது. சேலம், வீரபாண்டி, திருச்செங்கோடு மற்றும் மல்லசமுத்திரம் ஆகிய பகுதிகளில் இருந்து தலா, ஐந்து விவசாயிகள் தேர்வு செய்யப்பட்டு, பயிற்சிக்கு அழைத்து வரப்பட்டிருந்தனர். அவர்களுக்கு ஓய்வு பெற்ற உதவி வேளாண் இயக்குனர் பிரகாசம் பயிற்சி அளித்தார். இதில், நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்தி பயிர் சாகுபடி செய்வது, சாகுபடி செய்த பயிர்களை அதிக விலைக்கு விற்பனை செய்வது குறித்த பயிற்சி, உழவர் சந்தைகளின் பயன்பாடு மற்றும் உழவர் பாதுகாப்பு திட்டத்தின் பயன்கள் குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது.

## ரூ.10 லட்சத்துக்கு மஞ்சள் வர்த்தகம்

நாமகிரிப்பேட்டை: நாமகிரிப்பேட்டையில், 10 லட்சம் ரூபாய்க்கு மஞ்சள் வர்த்தகம் நடந்தது. நாமகிரிப்பேட்டை ஆர்.சி.எம்.எஸ்.,சில் நேற்று மஞ்சள் ஏலம் நடந்தது. இதில், விரலி ரகம் அதிகபட்சம், 100 கிலோ மூட்டை, 9,043 ரூபாய், குறைந்தபட்சம், 7,777 ரூபாய்க்கும் விலை போனது. உருண்டை ரகம், அதிகபட்சம், 8,242 ரூபாய், குறைந்தபட்சம், 7,412 ரூபாய்க்கும் விற்பனையானது. பனங்காலி ரகம், அதிகபட்சம், 15 ஆயிரத்து,12 ரூபாய்க்கு ஏலம் போனது. விரலி, 180 மூட்டைகளும், உருண்டை, 69, பனங்காலி, ஒன்று என, மொத்தம், 250 மூட்டைகளும், 10 லட்சம் ரூபாய்க்கு ஏலம் போனது.

## சொட்டுநீர் பாசன தொழில்நுட்பம்



தமிழ்நாட்டில் ஒரு லட்சம் எக்டேர் நிலப்பரப்பில் சொட்டு நீர் பாசன முறையில் சாகுபடி நடக்கிறது. பாசன நீரை குழாய்கள் மூலம் எடுத்து சென்று, செடியின் வேர்ப்பாகங்களில் தேவையான அளவு தினமும் கொடுக்கப் படுகிறது. இந்த நவீன முறை பழச்செடிகள், தென்னை, காய்கறிகள், மலை தோட்ட பயிர்களுக்கு மிகவும் ஏற்றது. இம்முறையில் மேற்பரப்பு பாசன முறையை விட ஏராளமான அனுகூலங்கள் உள்ளன. கண்ணீர் கணிசமான அளவில் சேகரிக்க முடியும். அதிக விளைச்சல். விளைபொருளின் உயர்ந்த தன்மை. நிலம் சமமாக இருக்க தேவைஇல்லை. களைகள் குறைவு மற்றும் உரம் இடுதலிலும் 30 சதவிகிதம்

குறைவு. இம்முறையை பயன்படுத்தினால் அனைத்து பயிர்களிலும் நீரில் 40 - 60 சதவிகிதம் மிச்சப்படுத்தி மகசூலில் 30 முதல் 100 சதவிகிதம் அதிகம் எடுக்க முடியும். தமிழ்நாட்டில் தற்பொழுது 30 ஆயிரம் முதல் 40 ஆயிரம் எக்டேர் தென்னைக்கும் 50ஆயிரம் முதல் 60 ஆயிரம் எக்டேர் மற்ற பயிர்கட்கும் (திராட்சை, வாழை, கரும்பு) சொட்டு நீர் பாசனம் செயல்படுகின்றது. தற்பொழுது உள்ள நீர்ப்பற்றாக்குறை காரணமாக விவசாயிகள் அனைவரிடமும் சொட்டுநீர் பாசனத்தின் பயன்பாடு அதிகரித்து வருகிறது.சொட்டுவான் தடைபடுதல்: சொட்டு நீர் பாசனத்தில் தண்ணீர் குளம், ஆழ்கிணறு, கால்வாய், ஆற்றிலிருந்து எடுக்கப்படுகிறது. இவ்வகையான தண்ணீரின் தரம் அதன் உற்பத்தி இடத்தை பொறுத்து அமையும். சொட்டுவான்கள் சிறு பொருட்களால் மாசடைந்து தடைபடக்கூடும். விரிவடைதல், சுருங்கும் தன்மையால் ஏற்படுகிறது (இது குப்பைகள் வேகமாக சொட்டுவான்களில் புகும்போது ஏற்படுகிறது). பூச்சிகள், எலிகள் தொல்லைகள். பாசி மற்றும் பாக்டீரியா வளர்ந்து உள்ளே படிதல். ரசாயன பொருள் உள்ளே தங்குதல் ஆகியவற்றால் சொட்டுவான் தடைபடுக்கூடும்.

வாரம் தோறும் பராமரிக்கல்: பிரதான மற்றும் கிளை குழாய்களின் கடைசியில் உள்ள மூடியை வாரம் ஒருமுறை திறந்து விட வேண்டும். இதன் மூலம் பிரதான மற்றும் கிளை குழாய்களில் உள்ள தூசுகளை வெளியேற்றலாம். சொட்டுவானில் தண்ணீர் சொட்டுகிறதா என்றும் குறிப்பிட்ட அளவு நீர் வருகிறதா என்றும் பார்க்க வேண்டும். சொட்டுவான்கள் மற்றும் கிளை குழாய்கள் ஒழுக்கான இடத்தில் உள்ளனவா என்றும் பரிசோதிக்க வேண்டும். வடிகட்டியில் கசிவுகள் ஏதேனும் உள்ளதா என்றும் பரிசோதிக்க வேண்டும்.சொட்டுநீர் பாசனத்தில் வடிகட்டி என்பது இருதயம் போன்றது. வடிகட்டி சரியில்லை என்றால் சொட்டுவான்கள் அனைத்திலும் தூசுகள் அடைத்து தண்ணீரின் வெளியேற்றம் குறைந்து விடும். வடிகட்டியின் இரு முனைகளில் உள்ள அழுத்தமானியை கொண்டு வடிகட்டியினை எப்பொழுது சுத்தம் செய்யப் பட்டது என்பதை அறிய முடியும். மணல் வடிகட்டியினை சுத்தம் செய்யும் முறை: பேக் வாஸ்- தினமும் 5 நிமிடம் தண்ணீரை அதன் எதிர் திசையில் செலுத்தி அதிலுள்ள அடைப்புகளை நீக்குவதன் மூலம் அதிலுள்ள மண் துகள்கள் மற்றும் தூசுகளை அகற்ற முடியும். அழுத்தமானிகளில் வடிகட்டியின் முன் மற்றும் பின்புறம் உள்ள அளவுகளின் வித்தியாசம் 0.3 கிலோ செ.மீ., அளவை தாண்டக்கூடாது. இந்த வித்தியாசம் வரும்பொழுது கண்டிப்பாக பேக்வாஸ் செய்ய வேண்டும். பேக்வாஸ் செய்யும்பொழுது நன்றாக மணல் வடிகட்டியை கிளறி விட வேண்டும். இப்படி

செய்யும் பொழுது வடிகட்டியினை அடியிலுள்ள சிறு துகளையும் சுத்தம் செய்ய முடியும். வலை வடிகட்டி, டிஸ்க் வடிகட்டி: வாரத்திற்கு ஒருமுறை வலை வடிகட்டியினை வெளியில் எடுத்து நன்றாக தண்ணீரில் விட்டு கழுவ வேண்டும். அதிலுள்ள ரப்பர் சீலை உடைக்காமல் மெதுவாக சுத்தம் செய்ய வேண்டும். பேக்வாஸ் செய்யலாம். அழுத்தமானியின் வித்தியாசம் 0.2 கிலோ, செ.மீ., ஆக இருக்குமாறு பார்த்து கொள்ள வேண்டும். பிரதான குழாய்கள் மற்றும் பக்கவாட்டு குழாய்கள் அடைப்பை அகற்றுதல்: சில நேரங்களில் மணல் மற்றும் வண்டல் மண் போன்ற சிறிய துகள்கள் வடிகட்டிகளில் சிக்காமல் பிரதான குழாய்களில் வந்து அடைத்து கொள்ளும். சில வகை பாசிகள் மற்றும் பாக்டீரியா போன்ற நுண்ணுயிரிகளும் குழாய்களில் வந்து தங்கிவிடும். இவற்றை நீக்க வாரம் ஒருமுறை பிளஸ் வால்வை திறந்து விட வேண்டும். பக்கவாட்டு குழாய்களில் உள்ள அடைப்புகள் அதன் நுனியில் உள்ள வால்வை நீக்கி வாரம் ஒருமுறை சுத்தம் செய்ய வேண்டும். **- டி.யுவராஜ்** வேளாண் பொறியாளர் உடுமலை.

**வைக்கோல்**



வைக்கோலில் குறைந்தளவு சத்துக்களே உள்ளன. இதில் அதிகமாக உள்ள 'ஆக்ஸாலேட்' எனும் சத்து கால்நடைகளின் உடம்பில் உள்ள கால்சியத்தை எடுத்து கொண்டு 'கால்சியம் ஆக்ஸாலேட்' ஆக வெளியேறுகிறது. வைக்கோலை யூரியாவுடன் சேர்த்து கொடுத்தால் வைக்கோலின் செரிமானம் அதிகமாகிறது. கறவை மாடுகளின் பால் உற்பத்தி கூடுவதற்கு ஏற்ற காரணியாகவும் இருக்கிறது. யூரியாவில் உள்ள நைட்ரஜன் சத்தினை கால் நடைகள் வயிற்றில் இருக்கும் நுண்கிருமிகள் பயன்படுத்தி தங்களுக்கு தேவையான புரதச்சத்தினை தயாரித்து கொள்கின்றன. பின்னர் கால்நடைகள் இந்த நுண்கிருமிகளை ஜீரணித்து தங்களின் புரதச்சத்து தேவையினை ஈடு செய்கின்றன.யூரியா வைக்கோல்நான்கு

கிலோ யூரியாவை 60 லிட்டர் தண்ணீரில் கரைத்து கொள்ளுங்கள். இந்த கரைசலை 100 கிலோ அளவுள்ள வைக்கோலினை சமமாக பரப்பி அதன் மீது பூவாளி துணை கொண்டு சீராகத்தெளித்து விடுங்கள். பின்னர் பதப்படுத்தி சிறிது சிறிதாக கால்நடைகளுக்கு இதை கொடுக்கலாம். இதுதான் சத்துமிக்க வைக்கோல் தயாரிக்கும் முறை. சத்துணவு வைக்கோல் கால்நடைகளுக்கு சிறந்த தீவனமாக இருந்தாலும் இதை பயன்படுத்துவதில் விவசாயிகள் கவனமுடன் செயல்பட வேண்டும். யூரியா கலந்த வைக்கோலை கொடுக்கும்போது ஆரம்பத்தில் அளவுக்கு அதிகமாக கொடுக்கக்கூடாது. அவ்வாறு கொடுத்தால் வயிறு உப்புசம் போன்ற திடீர் சுகவீனங்கள் ஏற்படும். யூரியா கலந்த வைக்கோலை கன்றுகளுக்கு கொடுக்கக்கூடாது. சொல்லப்பட்ட அளவுக்கு மேல் யூரியாவை சேர்ப்பது தவிர்க்கப்பட வேண்டும்.பட்டினியாக கிடந்த கால்நடைகளுக்கும் வயிற்று கோளாறு உள்ள கால்நடைகளுக்கும் யூரியா கலந்த வைக்கோல் தருவது நல்லதல்ல. அளவுக்கு அதிகமான யூரியாவினால் நச்சுத்தன்மை அறிகுறிகள் கால்நடைகளில் காணப்பட்டால் கால்நடை டாக்டரை உடனே அணுக வேண்டும். பொதுவாக கால்நடைகள் தாங்கள் வழக்கமாக உண்ணும் தீவனங்களுக்கே தம்மை பழக்கப்படுத்தி கொள்பவை. தீவனங்களில் திடீர் மாறுதலை செய்யும்போது, அவை வயிறு உப்புசம், ஒவ்வாமை போன்ற வியாதிகளால் பாதிப்படைகின்றன. எனவே யூரியா கலந்த வைக்கோல் போன்ற தீவனங்களை கால்நடைகளுக்கு கொடுக்கும்போது முதலில் சிறிது சிறிதாக கொடுத்து போகப்போக அளவினை அதிகரிக்க வேண்டும். சத்துணவு வைக்கோல் போன்ற தீவன வகைகளை தயார் செய்யும்போது விவசாயிகள் கால்நடை டாக்டரின் ஆலோசனைப்படி செய்ய வேண்டும். கால்நடை டாக்டரின் மேற்பார்வையில் தயாரிப்பு நடைபெறுவதால் பின் விளைவுகள் ஏதும் இன்றி அவை முற்றிலும் தவிர்க்கப்படும். **- டாக்டர் வி. ராஜேந்திரன்** முன்னாள் இணை இயக்குனர் கால்நடை பராமரிப்புத்துறை, நத்தம்.

## பூலோக கற்பக விருட்சம்



03.பூலோக கற்பக விருட்சம்தமிழகத்தில் பச்சை இளநீர், செவ்விளநீர் என இரண்டு ரகங்கள் உள்ளன. செவ்விளநீர் காயில் இளநீர் பானம் மட்டுமே இருக்கும். பச்சை நிற இளநீர் காய்களில் பெரும்பாலும் உள்ள 'இளசு நுங்கு' போன்ற இன்னமுதமான படைப்பை வாயிலே இட்டால் தொண்டைக்குள் செல்வது தெரிவது இல்லை. அத்துடன் சுவை நீர் சுகமாகக் கிடைக்கின்றது. தென்னிந்தி யாவில் தமிழ்நாடு, கேரளாவில் மிக அதிகமான அளவிலே தென்னை மரம் காணப்படுகிறது.சிறகுகள் போன்ற கூட்டு இலைகளையும் கொண்டு ஏறக்தாழ நூறு அடிகள் உயரம் வரை இந்த மரம் வளரும் தாவரமாகும். இதன் பாகங்கள் அனைத்துமே பயன்பாட்டில் உள்ளதால், இது 'பூலோகக் கற்பக விருட்சம்' என்றும் போற்றப்படுகிறது.இளமை தரும் இளநீர் இளநீரில் சோடியம், கால்சியம், பொட்டாசியம், பாஸ்பரஸ், இரும்புச்சத்து, செம்பு, கந்தகம், குளோரைடு முதலான தாது உப்புக்கள் மிக அதிகளவிலே உள்ளன. கோடையில் உடல் வெப்பத்தை தணிக்கும் சிறந்த குளிர்பானம் இளநீர்.இளம் காய், வழுக்கை, இளநீர்க்காய், முற்றிய தேங்காய் எனப்படும் 'ஒரோர்' அமைப்பிலும் சிறப்பான நன்மைகள் ஏராளம். பிரதான பகுதியாகிய இளநீர் தாகத்தை தணித்து சிறுநீரை தாராளமாக பிரியும்படி செய்கிறது. ஓரோர் காய் வீதம் இளநீரை தினமும் தொடர்ந்து அருந்தி வந்தால், தோல் மேம்பட்டு இளமையாக தோற்றம் தென்படும்.இளநீர் வகைகள் வியத்தகு வகைகளில் இளநீர் காய்கள் உள்ளன. அவை ஆற்று இளநீர், கேணி

இளநீர், புதிய இளநீர், அருவி இளநீர், அடுக்கு இளநீர், ஆயிரம் கச்சி இளநீர், மஞ்சள் கச்சி இளநீர், கரு இளநீர், சோரி இளநீர், காய்ந்த இளநீர் என பல ரகங்கள் உண்டு. இறுகிய இளநீர் காயின் உள் பகுதியில் வழுக்கையும், சுவை நீரும், அரிய மருத்துவ குணங்களும் அமைந்துள்ளன. "காணி நிலத்தில் பசுங்கீற்றும், இளநீரும் தரும் தென்னை மரம் பக்கத்திலேயே வேணும்," என்கிறார் பாரதியார். "இளநீ... இளநீ..." என காலை வேளையில் கூவிக்கூவி விற்கும் வியாபாரியின் தெள்ளிய குரல் அதோ கேட்கிறது! - முன்னோடி விவசாயி **எஸ்.நாகரத்தினம்,** விருதுநகர்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## வெப்பச்சலனம் காரணமாக தமிழகத்தில் மழை பெய்யும் : சென்னை வானிலை ஆய்வு மையம்




சென்னை: வெப்பச்சலனம் காரணமாக தமிழகத்தின் ஓரிரு இடங்களில் மழை பெய்யும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. தமிழத்தின்

ஒரு சில இடங்களில் பரவலாக மழை பெய்து வருகிறது. ஒரு சில இடங்களில் கனமழையும் பெய்துள்ளது. இந்நிலையில் வெப்பச்சலனம் காரணமாக தமிழகம் மற்றும் புதுச்சேரியில் ஓரிரு இடங்களில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

சென்னையை பொறுத்த வரை வானம் மே மூட்டத்துடன் காணப்படும் என்றும், சென்னையில் மழை பெய்வதற்கான வாய்ப்புகள் இல்லை என்று வானிலை மையம் தெரிவித்துள்ளது. இந்நிலையில் சென்னையில் நேற்றிரவு பட்டினப்பாக்கம் உள்ளிட்ட சில இடங்களில் மிதமான மழை பெய்தது.

## ரூ.5 லட்சத்துக்கு நிலக்கடலை ஏலம்

அனுப்பர்பாளையம்: சேவூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் இந்த வாரம் நடைபெற்ற ஏலத்தில் 229 நிலக்கடலை மூட்டைகள் வந்திருந்தன. சென்ற வாரத்தைவிட 125 நிலக்கடலை மூட்டைகள் வரத்து அதிகரித்து இருந்தது. குவிண்டால் ஒன்றுக்கு முதல் ரக நிலக்கடலை ரூ. 5200 முதல் ரூ.5500 வரையிலும், இரண்டாவது ரகம் ரூ. 4800 முதல் ரூ. 5100 வரையிலும், மூன்றாம் ரகம் ரூ. 4400 முதல் ரூ. 4780 வரையிலும் ஏலம் போனது. மொத்தம் ரூ.5 லட்சத்துக்கு ஏலம் நடைபெற்றது. இந்த ஏலத்தில் 18 விவசாயிகளும், 5 வியாபாரிகளும் பங்கேற்றதாக சேவூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூட கண்காணிப்பாளர் ராஜூ தெரிவித்துள்ளார்.

## பிஏபி திட்டத்தில் குழாய் மூலம் விவசாய பாசனம் குறித்த ஆலோசனை

பொள்ளாச்சி: திருப்பூர் மாவட்டம் திருமூர்த்தி அணையிலிருந்து ஒவ்வொரு ஆண்டும் இரண்டு மண்டல பாசனம் என்ற விகிதத்தில், இரண்டு ஆண்டுகளில் 4 மண்டல பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்படுகிறது. அவ்வாறு தண்ணீர் திறக்கும்போது, ஒவ்வொரு மண்டலத்திற்கும் குறிப்பிட்ட நாட்கள் கால்வாய் வழியாக செல்லும் தண்ணீர் மூலம் விவசாயத்துக்கு போதுமானதாக இருப்பதில்லை என்று கூறப்படுகிறது. இதையடுத்து, பிஏபி திட்டத்தின் மூலம் பிரதான கால்வாயிலிருந்து குழாய் மூலம் விவசாய பாசனம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இதில் முதற்கட்டமாக குடிமங்கலம் ஒன்றியத்திற்குட்பட்ட வீதம்பட்டி வேலூரில் உள்ள விவசாய நிலத்திற்கு,

ரூ.48கோடியே 7 லட்சத்தில் குழாய் மூலம் பாசனம் அமைக்க பொதுப்பணித்துறை மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், பிஏபி திட்டத்தில் குழாய் மூலம் பாசனம் குறித்த விவசாயிகளுடனான கலந்தாலோசனை கூட்டம், பொள்ளாச்சி சப்.கலெக்டர் காயத்ரி தலைமையில் நடந்தது. இதில் வேளாண்துறை, பொதுப்பணித்துறை, மின்வாரியத்துறை, உள்ளாட்சித்துறை உள்ளிட்ட பல்வேறு அரசு துறை அதிகாரிகளும், விவசாயிகளும் பலர் கலந்து கொண்டனர். இந்த கூட்டத்தின்போது, சப்.கலெக்டர் காயத்ரி கூறுகையில், ‘குடிமங்கலம் ஒன்றியம் வீதம்பட்டி வேலூர் பகுதியில் உள்ள விவசாய நிலங்களில், குழாய் மூலம் பாசனம் அமைப்பது தொடர்பாக, விவசாயிகள் சம்மதம் தெரிவிக்கும் பட்சத்தில், அப்பகுதியில் உள்ள சுமார் 400விவசாயிகளிடம் சம்மதம் கடிதம் பெற்று, தோட்டக்கலைத்துறை இயக்குனருக்கு அனுப்பி வைக்கப்படும்’ என்றார்.

பின் இதுகுறித்து வேளாண் அதிகாரிகள் கூறுகையில், ‘பிஏபி திட்டத்தில், அணையிலிருந்து திறக்கப்படும் தண்ணீர் பிரதான கால்வாய் வழியாக, ஒவ்வொரு ஆண்டும் குறிப்பிட்ட நாட்கள் விவசாய பகுதிக்கு செல்கிறது. இருப்பினும் அந்த குறிப்பிட்ட நாட்களை தவிர்த்து, பிறநாட்கள் விவசாயத்துக்கு தண்ணீர் கிடைக்காத சூல்நிலை உருவாகும். இந்த குறையை போக்க, பொதுப்பணித்துறை மூலம் கால்வாயிலிருந்து குழாய் மூலம் பாசனத்துக்கு தண்ணீர் கொண்டு செல்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படுகிறது. அவ்வாறு அந்த திட்டம் செயல்படுத்தப்படும் பட்சத்தில், அணையிலிருந்து கால்வாயில் தண்ணீர் திறக்கப்படும் போது, குறிப்பிட்ட நாட்கள் இல்லாமல் அதிக நாட்கள் விவசாயத்துக்கு தண்ணீர் கிடைப்பது மட்டுமின்றி, ஒரு ஏக்கருக்கு நாள் ஒன்றுக்கு சுமார் 6 ஆயிரம் லிட்டர் வரை தண்ணீர் கிடைக்க பெறும்’ என்றனர்.

**தண்ணீர் குறைவாக இருப்பதால் நேரடி நெல் விதைப்பு தொழில்நுட்பம் பலன் தரும் விவசாயிகளுக்கு யோசனை**

திருச்சி, : தண்ணீர் குறைவாக இருப்பதால் நஞ்சை நிலங்களில் நேரடி நெல் விதைப்பு செய்யும் தொழில்நுட்பம் குறித்து விவசாயிகளுக்கு யோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேட்டூர் அணையின் நீர்மட்டம் குறைவாக உள்ள தற்போதைய சூழ்நிலையில் காவிரி டெல்டா பாசன பகுதிகளில் உள்ள நஞ்சை நிலங்களில் நெல் சாகுபடிக்கு நாற்றங்கால் தயார் செய்து நடுவதற்கு மாற்றாக நஞ்சை புழுதியில் நேரடி நெல் விதைப்பு செய்து சம்பா நெல் சாகுபடி செய்யலாம். இம்முறையில் ஆற்றுநீர் வரத்து காலதாமதமாகும் நேரம், எதிர்பார்த்த பருவமழை கிடைக்காத தருணத்தில் வயலை புழுதியாக தயார் செய்து நெல் விதைகளை நேரடியாக விதைப்பு செய்து பின்னர் ஆற்று பாசனத்தில் நீர்வரத்து கிடைத்தவுடன் சேற்று நெல்லாக மாற்றி சாகுபடி செய்ய வேண்டும்.

வயலை தயார் செய்ய கோடை உழவு அவசியமாகும். மழை கிடைக்கும்போது 2 அல்லது 3 முறை நிலத்தை உழுது புழுதியாக்க வேண்டும். கடைசி உழவை ரோட்டவேட்டர் உதவியுடன் உழுது நேரடி விதைப்பு செய்ய வேண்டும். நன்கு உழுவதால் நீர்பிடிக்கும் தன்மை அதிகரிக்கிறது. பூச்சிகளின் கூண்டு புழுக்கள், நோய்களின் வித்துக்கள் அழிக்கப்படுகின்றன. மண் இறுக்கம் ஏற்பட வாய்ப்புள்ள இடங்களில் ஏக்கருக்கு 400 கிலோ ஜிப்சம் இட்டு கடைசி உழவு செய்ய வேண்டும். செப்டம்பர் 1 முதல் 15 வரை மத்தியகால ரகங்கள் விதைப்பு செய்வதற்கு (135 நாட்கள் வயதுடையவை) ஏடிடீ ஆர்-49, கோ 43, கோ (அல்லது) 50 டி.ஆர்.ஒய்-3யை பயன்படுத்த வேண்டும். செப்டம்பர் 20ம் தேதிக்கு மேல் குறுகியகால ரகங்கள் விதைப்பு செய்வதற்கு ஏடிடீ- 36, ஏடிடீ-45 ஆகியவற்றை பயன்படுத்த வேண்டும்.

ஒரு ஏக்கருக்கு 40 கிலோ விதைகள் தேவைப்படும். விதைகளை ஒரு லிட்டர் தண்ணீரில் 10 கிராம் பொட்டாஷ் என்ற அளவில் கலந்து ஊறவைத்து நிழலில் உலர்த்த வேண்டும். விதைப்பதற்கு முன்பாக அசோஸ்பைரில்லம் 200 கிராம், பாஸ்போ பாக்டீரியா 200 கிராம் மற்றும் எதிர் உயிர் பாக்டீரியா சூடோமோனாஸ் ஒரு கிலோ விதைக்கு 10 கிராம் வீதம் கலந்து விதை நேர்த்தி செய்து விதைக்க வேண்டும்.

வயலில் முதல் மழை வந்தவுடன் 4 பொட்டலம் அசோஸ்பைரில்லம் 800 கிராம், பாஸ்போபாக்டீரியா 800 கிராமை 20 கிலோ நன்கு மக்கிய தொழு உரத்துடன் கலந்து வயலில் இட வேண்டும். நெல் விதை முளைக்க போதுமான மழை பெய்தவுடன் பயிர் முளைத்த 5 நாட்களுக்குள் பிரிட்டிலாகுளோர் மற்றும் சேப்னர் 30 இசி என்ற களைக்கொல்லியை ஏக்கருக்கு 600 மி.லி தெளிக்க வேண்டும். விதைப்பதற்கு முன் கடைசி உழவில் ஏக்கருக்கு 5 டன் மக்கிய தொழு உரத்தை இட வேண்டும் அல்லது ஏக்கருக்கு 300 கிலோ மக்கிய தொழு உரத்துடன் 20 கிலோ மணிச்சத்தை 125 கிலோ சூப்பர் பாஸ்பேட் கலந்து நிழலான இடத்தில் போதிய நீர் தெளித்து ஒரு மாதத்தில் ஊட்டமேற்றிய தொழு உரமாக மாற்றி அடியுரமாக இட வேண்டும்.

மத்தியகால நெல் ரகங்களாக இருப்பின் பரிந்துரை செய்யப்படும் யூரியா, பொட்டாஷை நான்கு சமபங்காக பிரித்து பயிர் முளைத்த 20- 25ம் நாள், 40- 45ம் நாள், 60- 65ம் நாள், 80- 85ம் நாளில் மண்ணில் நன்கு ஈரமுள்ள போது இட வேண்டும். குறுகியகால நெல் ரகங்களாக இருப்பின யூரியா, பொட்டாஷை 3 சமபங்காக பிரித்து பயிர் முளைத்த 20- 25ம் நாள், 40- 45ம் நாள், 60- 65ம் நாட்களில் இட வேண்டும். துத்தநாக நுண்ணூட்ட சத்து குறைபாடுள்ள நிலங்களில் ஏக்கருக்கு 10 கிலோ ஜிங்க்சல்பேட் உரத்தை 10 கிலோ மணலுடன் கலந்து அடியுரமாக இட வேண்டும். ஆற்றுநீர் வரத்தை பொறுத்து நீர்பாசனம் செய்ய வேண்டும். ஒவ்வொரு பாசனமும் 2 அங்குல ஆழம் நீர் இருந்தால் போதுமானது.

## பாபநாசத்தில் 29 குவிண்டால் பருத்தி ஏலம்

பாபநாசம் : பாபநாசம் ஒழுங்குமுறை கூடத்தில் நடந்த பருத்தி ஏலத்தில் 29 குவிண்டால் பருத்தி விற்பனைக்கு வந்தது. பாபநாசம் ஒழுங்கு முறை கூடத்தில் பருத்தி ஏலம் நடைபெற்றது. இதில் ரூ.1,48,889 மதிப்பில் 29.48 குவிண்டால் பருத்தி ஏலத்திற்கு கொண்டு வரப் பட்டது. பாபநாசம், செம்பனார்கோயில் பகுதிகளிலிருந்து 2 வியாபாரிகள் கலந்து கொண்டனர். மறைமுக பருத்தி ஏலத்தில் அதிகபட்சம் ஒரு குவிண்டால் ரூ.5,379க்கும், குறைந்தப் பட்சமாக ரூ.4,069க்கும்,

சராசரியாக ரூ.5,051 க்கு ஏலம் போனது. ஏலத்தில் தஞ்சாவூர் விற்பனைகுழு செயலாளர் ரவி, மேற்பார்வையாளர் பிரியமாலினி, கண்காணிப்பாளர் சங்கரராஜா கலந்து கொண்டனர்.